அலங்காநல்லூர் பகுதியில் கனிவளங்கள்.

* 139 வினா.— திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் விலை உயர்ந்த தாதுப் பொருள்கள் கிடைப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு செ. மாதவன்: இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : இந்த சர்க்கரை ஆலை நிர்மாணிக்கப் பட்ட நேரத்தில் நீர் ஊற்று ஆராய்ச்சிக்கு வந்த வெளிநாட்டு நிபுணர்கள் இந்த இடத்தில் விலை உயர்ந்த தாதுப் பொருள்கள் இருப்பதாக எழுதி வைத்திருக்கிறார்கள். அது அந்தச் சர்க்கரை ஆலையில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பைப் பற்றி மறுபரிசிலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பல ஆண்டுகளாக அந்தச் சர்க்கரை ஆலையின் தலைவராக இருந்து வரும் மாண்புமிகு உறுப்பினர் இன்றைக்குத்தான் அந்தத் தகவலை கூறி இருக்கிறார்கள். அதுபற்றி எழுதி அனுப்பினால் பரிசீலிக்கப் படும்.

Industrial potentialities in Tiruttani taluk

* 140 *Q.*—THIRU E. S. THYAGARAJAN : Will the Hon the Minister for Industries be pleased to state—

(*a*) whether any investigations to explore the industrial potentialities in Tiruttani taluk have been made so far; and

(*b*) the results if any achieved in this regard?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை

(இ) கேள்விக்கு இடமில்லை.

Appointment of District Munsiffs

* 141 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that an interview has taken place by the Madras Public Service Commission for the selection of posts of District Munsiffs around the second week of September 1971 ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் நேர்முக நியமனமுறை மூலம் மாவட்ட முன்சீப்புகளாக நியமிக்க 15 பேர்களைத் தெரிந்தெடுத்தது ; சார்நிலை மாஜிஸ்ட்ரேட்டு களிலிருந்து 12 பேர் பதவி மாற்றல் மூலம் மாவட்ட முன்சீப்பு